மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.01/2022
அ.வ.எண்.306/2015

கந்தாயம்மாள் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. கந்தசாமி
2. ஆறுமுகம்
3. தமிழ்நாடு அரசு சார்பாக
மாவட்ட ஆட்சியர், சேலம்.
4. வருவாய் கோட்டாட்சியர், மேட்டூர்அணை.
5. வட்டாட்சியர், மேட்டூர்
6. கிராம நிர்வாக அலுவலர், ஓலைப்பட்டி கிராமம். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 11.02.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.வேல்முருகன் அவர்கள் ஆஜராகியும், 1, 2ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.எஸ்.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாத நிலையிலும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் வழக்கினை திருத்த அனுமதி வழங்க கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுவின் சுருக்கம் : –

மனுதாரர் வழக்கு சொத்தினை அளப்பதற்காக நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க கோரி இ.ம.எண்.988/2016 தாக்கல் செய்திருந்தார். மேற்படி மனுவில்

நீதிமன்ற ஆணையாளர் நியமிக்கப்பட்டு அவர் வழக்கு சொத்தை பார்வையிட்டு தன்னுடைய அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளார். நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையின் படிக்கு வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 61 1/2 செண்ட் தான். வழக்குரையில் கூறியுள்ளதுபோல் 75 செண்ட் இல்லை. எனவே மேற்படி அளவை வழக்குரையில் திருத்த அனுமதி கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 1ம்எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு 2ம்எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய்யானது. மனுவில் கூறியுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர் மறுக்கின்றார். வழக்கு சொத்திற்கு பட்டா தவறுதலாக வழங்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாக ஆணையர் அளக்க வரும்போதே தெரிய வந்தது. எதிர்மனுதாரர்கள் எதிர்வழக்குரையில் வாதிக்கு 50 செண்ட் நிலத்தை தவிர வேறு நிலம் எந்தவிதத்திலும் பாத்தியப்பட்டது இல்லை என்று கூறியுள்ளார். அதேபோல் 1971ல் வாதி வையாபுரி இறந்த பின் அவரது மகன் பெருமாளிடம் 75 செண்ட் நிலம் கிரயம் பெற்றதாக கூறுவது தவறு என்றும், இந்த எதிர்மனுதாரர் சொத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 10 செண்ட் நிலத்தில் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பதற்கு தான் வழக்கு வடிவமைக்கப்பட்டது என்பதையும் எதிர்வழக்குரையில் கூறியுள்ளார்.

(ii) எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 1.10 செண்ட் நிலம் எந்த அளவுக்குள் வருகிறது என்று ஆவணங்களின் வாயிலாக பார்வையிட்டு அதை தெளிவுப்படுத்த வேண்டும் என இந்த எதிர்மனுதாரர் அதற்கான வழிகாட்டுதலை நீதிமன்றத்தில் கோரி அதை நீதிமன்றம் அனுமதித்த போதும் நிலத்தை அளந்த அளவையரும் செய்ய தவறிவிட்டார். அதை சாதகமாக கொண்டு மனுதாரர் 75 செண்ட் நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்திருந்த போதும் 61 1/2 செண்ட் நிலத்திற்கு ஆணையாளரின் அறிக்கையின் அடிப்படையில் வழக்கை திருத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என கோருவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல.

(iii) ஆணையாளரின் அறிக்கை இவ்வழக்கின் தீர்ப்பின் போது முடிவு செய்யப்படும் வகையில் ஆணையர் மனு இ.ம.எண்.988/2016ல் முடிக்கப்பட்டுள்ளது. வாதி கோரும்

61 1/2 செண்ட் நிலம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதும், அவருடைய சுவாதீன அனுபவத்தில் உள்ளது என கூறுவதும் தவறு. ஆவணங்களின் அடிப்படையில் இருதரப்பினர்களின் சொத்துகளை அளக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்ட போது தன்னிடம் உள்ள FMB ல் உள்ளவாறு அதை அளவீடு செய்ய முடியாது என கூறி எந்த முறையையும் பின்பற்றாமல் அ பதிவேட்டுக்கும், புலப்பட சுவடிக்கும் உள்ள வித்தியாசத்தை மட்டும் குறிப்பிட்டு ஏதோ ஒரு வகையில் பணியை முடிக்க வேண்டும் என சர்வேயரால் கொடுக்கப்பட்ட வரைபடத்தின் படி தாக்கல் செய்யப்பட்ட ஆணையரின் அறிக்கையின் அடிப்படையில் திருத்தப்பாடு மனுதாக்கல் செய்ய முடியாது.

(iv) 50 செண்டுக்கு மேல் வாதிக்கு ஆவணமோ, சுவாதீனமோ இல்லை. தவறாக வருவாய்துறை ஆவணங்கள் உருவான சூழ்நிலையை சாதகமாக்கி கொண்டு தனக்கு 75 செண்ட் என ஒரு நிலைப்பாட்டையும், ஆறு ஆண்டுகள் கழித்து 61 1/2 செண்ட் என தற்போது ஒரு நிலைப்பாட்டையும் எடுத்து அதன் அடிப்படையில் வழக்கை திருத்த கோருவது தவறு. எனவே மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 2 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர் வழக்கு சொத்தினை அளப்பதற்காக நீதிமன்ற ஆணையாளரை நியமிக்க கோரி இ.ம.எண்.988/2016 தாக்கல் செய்திருந்தார் எனவும், மேற்படி மனுவில் நீதிமன்ற ஆணையாளர் நியமிக்கப்பட்டு அவர் வழக்கு சொத்தை

பார்வையிட்டு தன்னுடைய அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளார் எனவும், நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையின் படிக்கு வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 61 1/2 செண்ட் தான் எனவும், வழக்குரையில் கூறியுள்ளதுபோல் 75 செண்ட் இல்லை எனவும், எனவே மேற்படி அளவுகளை வழக்குரையில் திருத்த அனுமதி கோரி மனுதாரர்/வாதி மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii)(a) 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனு பொய்யானது எனவும், மனுவில் கூறியுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர் மறுக்கின்றார் எனவும், வழக்கு சொத்திற்கு பட்டா தவறுதலாக வழங்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாக ஆணையர் அளக்க வரும்போதே தெரிய வந்தது எனவும், எதிர்வழக்குரையில் வாதிக்கு 50 செண்ட் நிலத்தை தவிர வேறு நிலம் எந்தவிதத்திலும் பாத்தியப்பட்டது இல்லை என்று கூறியுள்ளார் எனவும், அதேபோல் 1971 ல் வாதி வையாபுரி இறந்த பின் அவரது மகன் பெருமாளிடம் 75 செண்ட் நிலம் கிரயம் பெற்றதாக கூறுவது தவறு என்றும், இந்த எதிர்மனுதாரர் சொத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 10 செண்ட் நிலத்தில் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பதற்கு தான் வழக்கு வடிவமைக்கப்பட்டது என்பதையும் எதிர்வழக்குரையில் கூறியுள்ளார் எனவும் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii)(b) 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 1.10 செண்ட் நிலம் எந்த அளவுக்குள் வருகிறது என்று ஆவணங்களின் வாயிலாக பார்வையிட்டு அதை தெளிவுப்படுத்த வேண்டும் என இந்த எதிர்மனுதாரர் அதற்கான வழிகாட்டுதலை நீதிமன்றத்தில் கோரி அதை நீதிமன்றம் அனுமதித்த போதும் நிலத்தை அளந்த அளவையரும் செய்ய தவறிவிட்டார் எனவும், அதை சாதகமாக கொண்டு மனுதாரர் 75 செண்ட் நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்திருந்த போதும் 61 1/2 செண்ட் நிலத்திற்கு ஆணையாளரின் அறிக்கையின் அடிப்படையில் வழக்கை திருத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என கோருவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல எனவும், ஆணையாளரின் அறிக்கை இவ்வழக்கின் தீர்ப்பின் போது முடிவு செய்யப்படும் வகையில் ஆணையர் மனு இ.ம.எண்.988/2016 ல் முடிக்கப்பட்டுள்ளது எனவும், வாதி கோரும் 61 1/2 செண்ட் நிலம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதும், அவருடைய

சுவாதீன அனுபவத்தில் உள்ளது என கூறுவதும் தவறு எனவும், ஆவணங்களின் அடிப்படையில் இருதரப்பினர்களின் சொத்துகளை அளக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்ட போது தன்னிடம் உள்ள FMB ல் உள்ளவாறு அதை அளவீடு செய்ய முடியாது என கூறி எந்த முறையையும் பின்பற்றாமல் அ பதிவேட்டுக்கும், புலப்பட சுவடிக்கும் உள்ள வித்தியாசத்தை மட்டும் குறிப்பிட்டு ஏதோ ஒரு வகையில் பணியை முடிக்க வேண்டும் என சர்வேயரால் கொடுக்கப்பட்ட வரைபடத்தின் படி தாக்கல் செய்யப்பட்ட ஆணையரின் அறிக்கையின் அடிப்படையில் திருத்தப்பாடு மனுதாக்கல் செய்ய முடியாது எனவும், 50 செண்டுக்கு மேல் வாதிக்கு ஆவணமோ, சுவாதீனமோ இல்லை எனவும், தவறாக வருவாய்துறை ஆவணங்கள் உருவான சூழ்நிலையை சாதகமாக்கி கொண்டு தனக்கு 75 செண்ட் என ஒரு நிலைப்பாட்டையும், ஆறு ஆண்டுகள் கழித்து 61 1/2 செண்ட் என தற்போது ஒரு நிலைப்பாட்டையும் எடுத்து அதன் அடிப்படையில் வழக்கை திருத்த கோருவது தவறு எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) மனுவினை பரிசீலனை செய்ததில் நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையின் படிக்கு வழக்கு சொத்துவிபரத்தில் 75 செண்ட் கூறியுள்ளதை 61 1/2 செண்டாக திருத்தவும், அதற்கான சாட்டுரைகளை (Pleadings) வழக்குரையில் சேர்க்கவும் அனுமதி கோரி மனுதாரர்/வாதி இம்மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iv) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் இவ்வழக்கானது மனுதாரர்/வாதியால் வழக்கு சொத்து தனக்கு பாத்தியப்பட்டது எனவும், அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வாதிக்கு சரியான அளவிற்கு பட்டா வழங்க கோரியும் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது. தற்போது வழக்கு மொத்த விஸ்தீரணத்தில் கூறியுள்ள 75 செண்ட் என்பதை நீக்கிவிட்டு 61 1/2 செண்டாக திருத்த வேண்டும் என மனுதாரர் கோரிய போதும், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு மனுதாரர்/வாதிக்கு வழக்கு சொத்தில் 50 செண்டில் தான் உரிமையுள்ளது எனவும், 61 1/2 செண்டில் உரிமையில்லை எனவும்,

ஆகவே திருத்தத்தை அனுமதிக்க முடியாது என கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது. ஆனால் இம்மனுவில் மனுதாரருக்கு எவ்வளவு செண்ட் பாத்தியம் என்பது குறித்து தீர்மானிக்க முடியாது. அசல் வழக்கு விசாரணைக்கு பின்னிட்டு தீர்ப்பின்போது தான் முடிவு செய்ய இயலும் என்பதால் மேற்படி கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அ பதிவேட்டிற்கும், புலப்பட சுவடிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை மட்டும் குறிப்பிட்டுவிட்டு சர்வேயரால் கொடுக்கப்பட்ட வரைபடத்தின்படி நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் எனவும், அதன் அடிப்படையில் இம்மனுவை தாக்கல் செய்ய முடியாது என கட்சி செய்த போதும், நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை சரியா, தவறா என்பது குறித்து இம்மனுவில் தீர்மானிக்க முடியாது என்பதாலும், மனுவில் கோரியுள்ள திருத்தம் இருதரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சனையை தீர்க்கும் வகையில் உள்ளதா என்பதை பரிசீலனை செய்ய முடியும் என்பதால் 1, 2 எதிர்மனுதாரர்களின் கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vi) மனுதாரர்/வாதிக்கு வழக்கு சர்வே எண்ணில் தற்போது 61 1/2 செண்ட் பாத்தியம் என வழக்குரையை திருத்த கோரிய போதும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 50 செண்ட் மட்டும் தான் பாத்தியம் என கட்சி செய்துள்ளதால், மனுதாரர்/வாதிக்கு 61 1/2 செண்ட் பாத்தியமா அல்லது 50 செண்ட் பாத்தியமா என்பது குறித்து தீர்மானிக்க வேண்டியுள்ளதால் மனுதாரர் கோரும் திருத்தமானது இருதரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சனையை தீர்க்கும் வகையில் உள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vii) இந்நிலையில் வழக்கு ஆவணங்களிலிருந்து இவ்வழக்கில் விசாரணை ஆரம்பிக்காமல் உள்ளது தெரியவருகிறது. ஆகவே வழக்கு விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பே திருத்தல் மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மேற்படி திருத்தத்தை வழக்கில் சேர்க்க மனுதாரருக்கு ஓர் வாய்ப்பு வழங்குவது நீதிக்கு உகந்தது என்பதாலும், திருத்தமானது இருதரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்னையை தீர்க்கும்

வகையில் உள்ளதாலும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் நீதிமன்ற ஆணையாளர் கடந்த 15.11.2021 ல் தன்னுடைய அறிக்கையை தாக்கல் செய்துள்ள நிலையில் 2 1/2 மாதங்கள் கழித்து மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரரால் 1, 2 ம்எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர், 1, 2 ம்எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/– செலவுத்தொகை அளிக்கும் பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர், 1, 2 ம்எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/–செலவுத்தொகையாக 21.02.2022 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க 22.02.2022.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

S PRINCE SAMUVEL RAJ
Digitally signed by S PRINCE SAMUVEL RAJ
Date: 2022.02.15 18:00:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

S PRINCE SAMUVEL RAJ
Digitally signed by S PRINCE SAMUVEL RAJ
Date: 2022.02.15 18:01:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.